மாலை முரசு

## ரணில் - சஜித் கட்சிகள் சங்கமம் இவ்வருட இறுதிக்குள் சாத்தியம்

**தலதா அத்துகோரள நம்பிக்கை**



"ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்ப வற்றை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இவ்வருடத்துக்குள் வெற்றிய 05▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை 24.10.2025 | அதிர்வு 85

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### போர்க்குற்றங்கள் தொடர்பில்

# சர்வதேச விசாரணை அவசியம் இல்லையாம்

### நாடாளுமன்றில் பிரதமர் பகிரங்கம்



இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசா ரணை அவசியம் இல்லை என்று தேசிய மக்கள் சக்தி அரசு மீண்டும் வலியுறுத் தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற வாய்மொழி மூல வினாக்களுக்குப் பதில் வழங்கும் போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்த விடயம் தொடர்பில் 05▶

### முன்னாள் இராணுவச் சிப்பாய் மூலம்

# பாதாள உலகக் கும்பலால் லசந்த சுட்டுப் படுகொலை

### பொலிஸ் விசாரணையில் அம்பலம்

இராணுவத்தை விட்டு வெளியேறிய சிப்பாய் ஒருவருக்கு வழங்கப்பட்ட நிதி ஒப்பந்தம் ஊடாக தென் மாகாணத்தில் இயங்கும் பாதாள உலகக் கும்பலால், வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர சுட்டுக் கொல்லப்பட்டார் என்று விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

இந்தக் கொலையைச் செய்த கொலையாளி இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலும் அவரைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

துப்பாக்கிச்சூடு நடந்த நேரத்தில் பதிவான சிசிரிவி காட்சிகள் மூலம் நடத்தப்பட்ட விசாரணையின் போது கொலையாளியை அடையாளம் 05▶






# பருத்தித்துறை நகரத்தின் மரக்கறிச் சந்தையை பழைய இடத்துக்கு மாற்றக் கோரி போராட்டம்!

## புதிய இடத்தில் அதிகாலை முதல் வழமை போல் இயங்கிய சந்தை

**(வடமராட்சி நிருபர்கள்)**

பருத்தித்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள புதிய மரக்கறி சந்தையை முன்னர் இருந்த நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு இடமாற்றுமாறு கோரி பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் இன்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வர்த்தக சங்கத்தினருடன் ஓட்டோ உரிமையாளர் சங்கம் மற்றும் சில மரக்கறி வியாபாரிகள் ஒன்றிணைந்து பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டட வாசலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்ட பேரணி நகரின் ஒருவழி பாதை துறைமுக வீதி வழியாக பருத்தித்துறை நகர சபை வாசலை அரைமணி நேரத்தில் சென்ற டைந்தது.

சுமார் இருநூறு பேர் வரை மேற் கொண்ட இந்தப் பேரணி நகர சபை வாசலில் குழுமி நின்று மரக்கறி சந் தையை பழைய இடத்துக்கு மாற்றுமாறு கோரி பல்வேறு கோஷங்களை எழுப் பினர்.

தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்சன்ட் போல் டக்ளஸ் போல், பருத்தித்துறை நகர சபை செய லாளர் திருமதி தாரணி கஜரூபன் ஆகியோரிடம் பருத்தித்துறை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சந்தையை மாற்று மாறு கோரி மகஜர் ஒன்றைக் கைய ளித்தனர்.

போராட்டம் நடைபெற்ற இதேவேளை புதிய மரக்கறி சந்தை அதிகாலை முதல் வழமை போல் இயங்கியது.

இன்றைய சந்தை வியாபாரத்தின் போது ஒருசில மரக்கறி வியாபாரிகள் தவிர ஏனைய வியாபாரிகள் தமது வியா பாரத்தை மேற்கொண்டனர்.












# கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலை நினைவேந்தல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 50 மக்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கல்லூரியின் வெளி வாசலில் நடைபெற்றது.

1987 ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் மக்கள் தஞ்சம் அடைந்திருந்தபோது அவர்கள் மீது இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் கொடூர தாக்குதலை நடத்தியிருந்தனர். இதில் 50 அப்பாவி மக்கள் பலியாகியிருந்தனர். பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வைக் கொக்குவில் படுகொலை நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்திருந்தது.

முதலில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் மற்றும் 22, 23,23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை, கொக்குவில் பிரம்படி, கோண்டாவில், கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகம் ஆகிய இடங்களில் இந்திய இராணுவம் பொதுமக்களைப் படுகொலை செய்திருந்தது.





# பருத்தித்துறை மரக்கறிச் சந்தையைப் பார்வையிட்டு வியாபாரிகளுடன் கலந்தாலோசனை நடத்திய எம்.பி.

(வடமராட்சி நிருபர்கள்)

பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் மரக்கறிச் சந்தையை நவீன சந்தைத் தொகுதியில் இடமாற்றம் செய்து தருமாறு கோரி இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந் நிலையில், குறித்த சந்தைப் பகுதிக்கு இன்று விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் அங் குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

இதன்போது வியாபாரிகள் சிலர், நாடாளுமன்ற உறுப் பினருடன் தர்க்கத் தில் ஈடுபட்டிருந்தனர். சந்தைக்கு உரிய தீர்வில்லையேல் தீக்குளிப்போம் என வியாபாரி ஒருவர் சத்தமிட்டார்.

நிலைமைகளை அவதானித்த நாடா ளுமன்ற உறுப்பினர், இது தொடர்பில் கலந்தாலோசித்து நல்ல முடிவு எட்டப்படும் என்று தெரிவித்தார்.












# எம்.பிக்களுக்குப் பாதுகாப்பு இல்லை

## சபையில் சஜித் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனவும், இது ஒரு தீவிர பிரச்சினையாகக் கருதப்படுகின்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

இன்று நாடாளுமன்றத்தில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், வெலிகம பிரதேச சபை தவிசாளர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்த போதிலும், அவருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படாததால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதே போன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றனர். இது நகைச்சுவையல்ல. ஒருவர் கொல்லப்பட்டால் என்ன செய்ய முடியும்? வெலிகம சம்பவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்." – என்றார்.

---

### பாதாள...

காண முடிந்ததாக விசாரணைக் குழுக்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், கொலையாளி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த பாதாள உலகக் குழு உறுப்பினர் ஆகியோர் லசந்த விக்கிரமசேகரவைக் கொலை செய்த பிறகு அவர்கள் சென்ற வழியைக் கண்டறிய நேற்று முதல் பொலிஸார் அந்தப் பகுதியில் உள்ள சிசிரிவி கமராக்களை ஆய்வு செய்யத் தொடங்கினர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர் மற்றொரு கூட்டாளியுடன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார் எனவும், வழியில் இருவரும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றனர் எனவும் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், கொலை நடந்த நேரத்தில் அந்தப் பகுதியில் நடந்த உரையாடல்கள் குறித்த தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளையும் பொலிஸார் பெற்று, அதன் அடிப்படையில் தனி விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

இந்தக் கொலையில் மிதிகம ருவான், மிதிகம சுட்டி மற்றும் ஹரக்கட்டா ஆகிய பாதாள உலகக் குண்டர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமசேகர கடந்த சில ஆண்டுகளாகவே மரண பயத்தில் இருந்தார் என்று தெரியவந்துள்ளது.

இந்த மரண பயத்தின் காரணமாக, அவர் ஒரு இரகசிய வாழ்க்கை வாழப் பழகியிருந்தார் எனவும், தனது வசிப்பிடத்தைக் கூட மாற்றியிருந்தார் எனவும் விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

லசந்தவுக்கு வந்த மிரட்டல்கள் காரணமாக அவர் சுமார் 15 தனிப்படை காவலர்களை வைத்திருந்தார் எனவும் தெரியவந்துள்ளது. இருப்பினும், கொலை நடந்த நேரத்தில் அந்தக் காவலர்களில் ஒருவர் கூட அவருக்கு அருகில் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த விடயத்திலும் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிகம பிரதேச சபை தவிசாளரின் கொலை தொடர்பாக, பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய மேற்பார்வையிட்டுள்ளார்.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத்தின் வழிகாட்டுதலின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

---

### ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களில் 50 சதவீதமானோர் தற்போது தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி சங்கமம் இவ்வருடத்துக்குள் வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

2022 இல் நாடாளுமன்றத்தைக் கொளுத்துவதற்கு வந்த நபர்களுக்கு எதிராக அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்." – என்றார்.

---

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசு உடன்படவில்லை என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பிரதமர், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் என்றும், அந்தச் செயன்முறையானது, உள்ளகச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அரசு எதிர்ப்பதாகவும் பிரதமர், நாடாளுமன்றத்தில் இன்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் நம்பகமான உள்நாட்டுப் பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மழை கால நெருக்கடி

இலங்கையில் மழைக் காலங்களிலும் ஆண்டு இறுதியிலும் பருவகால தொற்றுநோய்கள் தீவிரமாக இருக்கும். அது வழமை. இம்முறையும் இன்ஃப்ளூயன்ஸா ஏ மற்றும் பி தொற்றுகள் மிகப் பாதிப்பான முறையில் அதிகரித்து வருகின்றன எனவும், குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பகல்நேர பராமரிப்பு மையங்கள், பாலர் பள்ளிகள் மற்றும் பள்ளிகளில் உள்ள குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர் என்று குழந்தை மருத்துவ ஆலோசகர் டாக்டர் மகேஷக விஜயவர்தன கூறுகின்றார்.

"பல குழந்தைகளுக்கு திடீர் காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல் மற்றும் சோர்வு என இந்த நோய் பல வடிவங்களில் தோன்றும். அதே நேரத்தில் சிலர் சளி போன்ற அறிகுறிகள், காது தொற்று மற்றும் குறிப்பாக ஆஸ்துமா உள்ளவர்களுக்கு சைனசிடிஸ் அல்லது மூச்சுத்திணறல் போன்றவை ஏற்படும்.

"சிறு குழந்தைகளுக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். இது சில நேரங்களில் நீரிழப்புக்கு வழிவகுக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், இன்ஃப்ளூயன்ஸா நரம்பு மண்டலத்தைப் பாதிக்கலாம். இரண்டு வயதுக் குட்பட்ட குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ள குழந்தைகள் நிமோனியா மற்றும் கடுமையான சுவாச சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும்.'' - என்றும் டாக்டர் விஜயவர்தன கூறினார்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அறிகுறிகளுக்காக உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என்றும், விரைவான அல்லது கடினமான சுவாசம், தொடர்ச்சியான வாந்தி, பசியின்மை அல்லது அசாதாரண மயக்கம் உள்ளிட்ட கடுமையான நோயின் அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பல சமயங்களில் தனியார்துறையிலிருந்து சோதனை முடிவுகள் கிடைத்த பின்னரே அரசு மருத்துவமனைகள் தேவையான வைரஸ் தடுப்பு மருந்துகளை வழங்க முடியும் என்று சுட்டிக் காட்டும் அந்த ஊடகம், இது சரியான நேரத்தில் பொது பராமரிப்புக்குக் குறிப்பிடத்தக்க தடையை உருவாக்குகின்றது என்றும் தெரிவித்திருக்கின்றது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில், டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள குழுக்களில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள் அடங்குவர் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. மழை காலங்களில் இத்தரப்பினர் குறித்து அதிக சிரத்தை எடுத்துக் கவனிப்பது முக்கியமாகும்.



# சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு

## மட்டக்களப்பு செயலகத்தால் ஏற்பாடு

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தனால் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் சுப்பர் பெயார் விற்பனை கண்காட்சி இன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப்பிரிவிலுமிருந்து உற்பத்தியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு கண்காட்சி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதி அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் ஆரம்பமான இந்த கண்காட்சியில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விற்பனை கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனிர் உட்பட மட்டக்களப்பு மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய மட்ட பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசு பல்வேறு விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள், உதவித் திட்டங்கள், மானிய அடிப்படையான வழங்கல்களை முன்னெடுத்துவரும் நிலையில் அவற்றின் மூலம் பெறப்படும் உற்பத்தி பொருளகளுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இவ் வாறான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத் தும் காண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் சிறு உற்பத்தியாளர்கள் தங்களது பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினைப்பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் நுகர்வோர் குறைந்த விலைகளிலும் சிறந்த சுத்தமான பொருள்களை பெற்றுக்கொள்ளும் வகையிலும் இவ்வாறான கண்காட்சிகள் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த கண்காட்சியில் பெருமளவமான மக்கள் பார்வையிட்டு பொருள்களையும் கொள்வனவுசெய்தனர்.












# உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பை உணர்ந்து செயலாற்றுதல் அவசியமானது

## *தவிசாளர்கள், செயலாளர்களுக்கு ஆளுநர் அறிவுறுத்து*

மாகாண சபைகள் சார்பில் மக்களோடு நேரடியாகத் தொடர்புபட்டுப் பணியாற்றும் நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்களே. அந்த மன்றங்களின் சேவைகளை மக்களிடத்தே முன்கொண்டு செல்லவேண்டிய பொறுப்பும் அவற்றை விரைந்து சேவை செய்யும் நிறுவனங்களாக மாற்றும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களையே சாரும்.

அவர்கள் அந்தப் பொறுப்பை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைகள் குறித்த பயிற்சித் திட்டம், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டது. வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகால், கிளிநொச்சியிலுள்ள பயிற்சி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இது இடம் பெற்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சனின் வர வேற்புரையைத் தொடர்ந்து, உரையாற்றிய ஆளுநர்,

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வெவ்வேறு விடயப் பரப்புக்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன. அவர்களை வலுப்படுத்துவதன் ஊடாகவே எமது மாகாணத்தின் அடிமட்ட அலகான உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்த முடியும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாகச் செயற்பட்டால்தான் மக்களின் தேவைகணளை முழுமைப்படுத்த முடியும்.

மத்திய அரசின் கீழான மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பன எவ்வாறு சுறுசுறுப்பாக விரைந்து மக்களின் தேவைகளைத் தீர்க்கின்றனவோ அதைப்போலவே, மாகாண அலகின் அலுவலகங்களும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். அதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர்களான நீங்கள்தான் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

அதேநேரம் எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் சிறப்பாகச் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களை கௌரவிக்கவேண்டும். இதன் ஊடாக சிறப்பாகச் செயற்படுபவர்களை நாங்கள் ஊக்குவிக்கலாம். அத்துடன் தவிசாளர்களும், செயலாளர்களும் மக்களுக்கு சேவையாற்றத்தான் வந்தவர்கள். அதை மாத்திரம் மனதிலிருத்திச் செயற்பட்டால் மக்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும்.–என்றார்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சமன் டிஸாநாயக்க, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# செம்மணி படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய அரசிடம் வேண்டுகோள்

செம்மணி படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்ற அமைச்சர் பீற்றர் கெய்ல் மற்றும் சிபோன் மக்டோ ஆகியோரிடம் நாடுகடந்த தமிழீழ அரச உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

செம்மணிப் படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பின்னணியில் ஶ்ரீலங்கா சிங்கள படைகளின் ஆட்கடத்தல்களில் ஈடுபட்ட தமிழின நபர்களான கருணா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிள்ளையான் போன்றவர்கள் மீது சர்வதேச தடைகள் கொண்டுவருமாறு நாடுகடந்த தமிழீழ அரசு இதன்போது வலியுறுத்தியுள்ளது.

தமிழ் லேபர் கட்சியின் தலைவர் சென் .கந்தையாவின் ஒருங்கமைப்பில் பல்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். லேபர் கட்சியின் மூத்த உறுப்பினரும் தமிழ் மக்களுக்காக பிரித்தானிய நாடாளுமன்றில் குரல் கொடுத்த சிபோன் மற்றும் பிரித்தானிய அரசின் முக்கிய அமைச்சர் பீற்றர் கெய்ல் ஆகிய இருவரிடமும் நாடு கடந்த தமிழீழ அரச உறுப்பினர்கள், செம்மனி மனித புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.



நாடுகடந்த தமிழீழ அரசின் இங்கிலாந்தின் வட மேற்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி கபில்டன் தர்சிகா, இரு அமைச்சர்களுக்கும் தனது வாழ்க்கை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் எவ்வாறு பாதிக்கப்பட்டது என விளக்கமாக எடுத்துரைத்தார்.

செம்மணியில் குழந்தை தாயுடன் புதைக்கப்பட்ட கொடுமைகள் பற்றியும் விளக்கினார்.

பின்னர் நாடுகடந்த தமிழீழ அரசின் உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் செம்மணி மனித புதைகுழி அறிக்கையைச் சமர்பித்தனர். அமைச்சர்கள் அங்கு கூடியிருந்த 200 இற்கும் மேற்பட்ட பல் நாட்டு மக்களின் முன்பு உரை நிகழ்த்தும் போது,

இன்று நாம் காசா நகரில் நடந்த கொடுமை சம்பவங்கள் போன்றே ஸ்ரீலங்காவிலும் வெளி உலகுக்கு மூடி மறைக்கப்பட்டு 80000 இற்கும் மேற்பட்ட தமிழ் பொது மக்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு இன்றும் நீதி கிடைக்கவில்லை

தற்போதைய அமைச்சர்களுடன் பேசி இன்னும் ஒரு வருடத்திற்குள் காணாமல் ஆக்கப்பட்டோர்கள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழிகளுக்குப் பின்னனியில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமின்றி அவர்களுக்கு உதவிய தமிழ் குழுக்களின் தலைமைகளான டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் மீதும் சர்வதேச தடைகளை விதிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க உழைப்பேன் என்று வாக்குறுதி அளித்தனர்.





# சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இறக்காமம் மாணிக்கமடு கிராமத்தில் தீபாவளி!

(நூருல் ஹுதா உமர்)

தேசிய சமூக ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை கட்டியெழுப்பும் நோக்குடன் நீதி மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் கீழ் சிறப்பு தீபாவளி கொண்டாட்டம் இறக்காமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், இறக்காமம் மாணிக்கமடு தமிழ் கிராமத்தில் நடைபெற்றது.

நீதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல். றினோசாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் திருமதி ஏ.கே. றொஸின்தாஜ் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர் ஐ.எல். முஹம்மட் றஸாக், கிராம உத்தியோகத்தர் ஏ.சி.எம். சமீர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.சிராஜ், உளவள ஆலோசகர் ஏ.எச். றகீப், சுற்றுச் சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர். வை.பி. ஜெமீனா உட்பட கிராம மட்ட தலைவர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தீபாவளி சிறப்பு கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று (23) திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்சினைகள் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பிரதேச செயலக விவசாயக் குழுக்கூட்டத்தில் இருந்து மாவட்ட செயலகத்துக்கு முன்மொழியப்பட்ட பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டுத் தீர்வுகள் எடுக்கப்பட்டது.

அத்துடன் தேசிய உர செயலகத்தின் மாவட்டத்துக்கான பிரதிப் பணிப்பாளர் எச். ஜி. எஸ். பிரேமரத்ன ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தின் 2025/26 பெரும் போகத்துக்கான உர விநியோகம் தொடர்பாகவும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டத்து.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள்,விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






# கனவுகளின் வயதில் தாய்மை; யார் பொறுப்பு?

இலங்கையானது தெற்காசியாவில் கல்வியிலும், ஆரோக்கியத்திலும் முன்னிலையில் இருக்கும் ஓர் நாடாகும். ஆனால் இந்தப் புள்ளி விவரங்களுக்கு அப்பால் இன்று ஒரு இருண்ட உண்மை மறைந்திருக்கிறது. அதாவது பெண்களின் "இளவயது கர்ப்பம்" என்பது தொடர்ந்து ஒரு தேசிய நெருக்கடியாக எழுந்து வருகின்றது.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, நாட்டின் ஒட்டுமொத்த பிறப்பு விகிதம் குறைந்திருந்தாலும் குறிப்பாக கிராமப்புறங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலும் வாழும் 15 முதல் 18 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகளிடையே இந்தச் சவால் அதிகம் காணப்பட்டு வருகின்றமை கவலைக்கு உரிய விடயம் ஆகும்.

இந்த நிலை வெறும் சுகாதாரப் பிரச்சினையல்ல. இது கல்வி, பொருளாதார வளர்ச்சி, மற்றும் சமூக நீதி ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்த சிக்கலான சங்கிலித் தொடர் வடிவிலான விளைவுகளை ஏற்படுத்துகிறன. பருவமடைதல் என்பது வாழ்க்கையின் வளர்ச்சிப் படிநிலை. ஆனால், இலங்கையில் பல இளம்பெண்களுக்கு அது எதிர்பாராத தாய்மை மற்றும் குழந்தைப் பருவத்தின் முடிவாக அமைந்துள்ளது.

சமீபகால ஆய்வுகளும், அறிக்கைகளும் இளவயது கர்ப்பங்களின் விகிதமானது பிராந்தியங்களுக்கு இடையில் வேறுபடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மாவட்டங்களில் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் மத்திய, ஊவா மாகாணங்களின் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது. இதனை விட 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண் பிள்ளைகளும் கர்ப்பம் தரிக்கும் அளவும் அதிகரித்து வருகின்றன. இவை சட்டரீதியான குற்றமாகவும், குழந்தைகளின் உரிமைகள் மீறலாகவும் கருதப்பட்டாலும் சமூக அமைப்பிலுள்ள குறைபாடுகளின் மூலம் இச்சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தான் உள்ளன. இவ்வாறு இளந்தாய்மார்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மிகக் கொடுமையானவையாகக் காணப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக அவர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலைகளை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாவதோடு, சமூக ரீதியாக ஒதுக்கப்பட்டு வறுமையின் உச்சத்துக்கு தள்ளப்படுகின்றனர்.

இளவயது கர்ப்பம் ஏற்படுவதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.

அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களில் கல்வி என்பது ஒரு ஆடம்பரமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, அண்மைக் காலங்களில் பல பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதற்கோ அல்லது குறைந்த வயதில் திருமணம் செய்து வைப்பதற்கோ கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் பாதுகாப்பு இல்லாத சூழல், பாலியல் சுரண்டல் மற்றும் தவறான உறவுகளுக்கு இளம் வயது பெண்கள் செல்வதற்கு வழிவகுக்கின்றன.



இ.அபினகா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இந்த இளவயது கர்ப்பத்தைக் குறைப்பதற்கான மிகச் சக்தி வாய்ந்த கருவி 'கல்வி' ஆகும். ஆனால் இலங்கையின் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் 'விரிவான பாலியல் கல்வி' என்பது சர்ச்சைக்குரிய விடயமாகவே உள்ளது. பாலியல் மற்றும் இனப் பெருக்க ஆரோக்கியம் பற்றிய விஞ்ஞான ரீதியான நடுநிலையான தகவல்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் தவறான புரிதல்கள், வதந்திகள் மற்றும் ஊடகத் தகவல்களை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது. கருத்தடை வழிமுறைகள், பாது காப்பான உடலுறவு மற்றும் பெண்களின் சம்மதத்தின் முக்கியத்துவம் ஆகியவை பற்றிய தெளிவு இல்லாதது கர்ப்ப விகிதத்தை அதிகரிக்கிறது. மேலும், சில சமூகங்களில் குறிப்பாகப் பெருந்தோட்டப் பகுதிகளிலும், தொலை தூரக் கிராமங்களிலும், பெண்களுக்கு இளவயதில் திருமணம் செய்து வைப்பது இன்றும் ஒரு அங் கீகரிக்கப்பட்ட நடைமுறையாக உள்ளது.

குடும்ப கௌரவம், பாரம்பரியம் என்ற பெயரில் இளம்பெண்கள் தமது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தயாராகாத நிலையில் தாய்மைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதே சமயம் இளம் வயதினர் தங்களுக்குரிய உடல் ஆரோக்கியம் சார்ந்த கேள்விகளைக் கேட்கவோ அல்லது இனப்பெருக்க ஆரோக்கியச் சேவைகளைப் பெறவோ தயங்குகிறார்கள். சமூகத்தின் தீர்ப்பு, சுகாதார ஊழியர்களிடம் உள்ள மனப்பான்மை மற்றும் இரகசியத்தன்மை இன்மை பற்றிய அச்சம் காரணமாகவே இது நிகழ்கிறது. குறிப்பாக திருமணமான இளம்பெண்கள் கூட, தகுந்த கருத்தடை ஆலோசனைகளைப் பெறுவதற்குத் தைரியம் கொள்வதில்லை.

இளவயது கர்ப்பம் என்பது ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கிறது. இளந்தாய்களுக்குப் பிரசவத்தின்போது ஏற்படும் சிக்கல்களின் அபாயம் மிக அதிகம். முன்கூட்டிய பிரசவம், குறைப்பிரசவக் குழந்தைகள், இரத்தச்சோகை, நஞ்சுக்கொடி சிக்கல்கள் மற்றும் தாயின் இறப்பு விகிதம் கூட இந்த வயதினரிடையே அதிகம் காணப்பட்ட வருகின்றது. பிறக்கும் குழந்தைகளும் குறைந்த எடையுடன் பிறப்பது, ஊட்டச்சத்து குறைபாடு, மற்றும் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கிய சவால்களை எதிர்கொள்வது போன்ற அபாயங்களைச் சுமக்கிறார்கள். இதனால் நாட்டின் ஒட்டுமொத்த மனித மூலதன வளர்ச்சியும் தடைப்படுகிறது. சமூகத்தால் ஒதுக்கப்படுதல், மனச்சோர்வு மற்றும் துயரம் ஆகியவை இளம் தாய்மார்கள் மத்தியில் அதிகரித்து பல சமயங்களில் அவர்கள் தமது துணையின் ஆதரவைப் பெறாமல் அல்லது மோசமான உறவுநிலைச் சூழலில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

இலங்கையின் இளைய தலைமுறையின் எதிர்

தொடர்ச்சி▼

# கனவுகளின் வயதில் தாய்மை; யார் பொறுப்பு?

தொடர்ச்சி▲

காலத்தைப் பாதுகாக்க அரசாங்கம், கல்வி நிறுவனங்கள், சுகாதாரத் துறை மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயற்பட வேண்டும். இதற்காக உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட, வயதுக்கு ஏற்ற விரிவான பாலியல் கல்வியைத் தேசிய பாடத்திட்டத்தில் கட்டாயமாக்க வேண்டும். இந்தக் கல்விமுறையானது இனப்பெருக்க ஆரோக்கியம், பாலியல் கடத்துகை மற்றும் உறவுகளின் ஆரோக்கியம் பற்றிப் பேச வேண்டும். இதன் மூலம் இளவயதினர் தகவலறிந்த முடிவுகளை எடுக்க முடியும்.

அத்துடன், சுகாதார நிலையங்கள் இளம் வயதினருக்கான இரகசியமான, பாகுபாடற்ற மற்றும் நட்புணர்வுக் கொண்ட சேவைகளை வழங்க வேண்டும். கருத்தடை ஆலோசனைகள், பரிசோதனைகள் மற்றும் ஆதரவு சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும். அதே சமயம், வறுமையில் வாடும் குடும் பங்களுக்குக் கல்வி ஊக்கத்தொகைகள் வழங் குதல், மற்றும் இளந்தாய்கள் தமது கல்வியைத் தொடரக்கூடிய வசதிகளை ஏற்படுத்துதல் மிக அவசியமாகும்.

மேலும் இளவயதுத் திருமணங்கள் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு எதிரான சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் சமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் மூலம் இளவயது கர்ப்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூக மனப்பான்மையை மாற்றியமைக்க வேண்டும். முக்கியமாக, ஆண்களையும் சிறுவர்களையும் இந்த உரையாடலில் ஈடுபடுத்தி பொறுப்பான பாலியல் நடத்தை மற்றும் பாலின சமத்துவத்தைப் பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.



இலங்கையில் இளவயது கர்ப்பம் என்பது அதன் சமூகக் கட்டமைப்பின் அடித்தளத்தில் விழுந்திருக்கும் ஒரு ஆழமான விரிசலைக் குறிக்கிறது. நாம் தொடர்ந்து இந்தச் சவாலைத் தனிப்பட்டவர்களின் பிரச்சினை என்று ஒதுக்கித் தள்ளுவோமானால், அது நம் தேசத்தின் எதிர்காலத் தலைமுறையின் ஆரோக்கியத்தையும், பொருளாதார மேம்பாட்டையும் நிரந்தரமாகப் பாதிக்கும். இன்று நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நாளை உருவாகவிருக்கும் இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைக்கும்.

எனவே நாம் ஒரு வலுவான, ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க வேண்டுமென்றால் உடனடியாக இந்த மௌனமான நெருக்கடியின் மீது வெளிச்சத்தை ஏற்படுத்தி துணிச்சலான சமூக மற்றும் கொள்கை சார்ந்த சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியாக வேண்டும். இளம்பெண்களின் இழக்கப்பட்ட குழந்தைப் பருவத்தைக் காப்பது நாட்டின் எதிர்காலத்தைக் காப்பதற்கு சமமாகும். ஆகவே இனிமேலும் தாமதிக்காமல் செயலாற்ற வேண்டியது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.








# ஐக்கிய நாடுகள் தினமும் நிலையான அபிவிருத்தி இலக்குகளும்

ஐக்கிய நாடுகள் (United Nations, UN) என்பது உலக அமைதி, பாதுகாப்பு, மனித உரிமைகள், பொருளாதார - சமூக வளர்ச்சி மற்றும் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றை முன்னேற்றும் ஒரு உலகளாவிய அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆகும்.

இதன் தலைமையகம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ளது. அதன் அலுவலகங்கள் ஜெனீவா (ஸ்விட்சர்லாந்து), வியென்னா (ஆஸ்திரியா), நைரோபி (கென்யா) ஆகிய இடங்களில் உள்ளன.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு எதிர்காலப் போர்களைத் தடுக்கும் நோக்கத்துடன் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது."United Nations" என்ற பெயர் முதலில் பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்லால் 1939 இல் பயன்படுத்தப்பட்டது. 1945 ஏப்ரல் 25 அன்று சான் பிரான்சிஸ்கோவில் 50 நாடுகள் ஒன்று கூடி, ஐ.நா. சாசனத்தை உருவாக்கினர். அது ஜூன் 25 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1945 ஒக்ரோபர் 24 அன்று நடைமுறைக்கு வந்தது. இன்று அது "ஐ.நா. நாள் (UN Day)" ஆகக் கொண்டாடப்படுகிறது. தொடக்கத்தில் 51 உறுப்பினர் நாடுகள் இருந்தன தற்போது 193 ஆக உயர்ந்துள்ளது.

### நோக்கங்கள்

- உலக அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுதல்.
- மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சமத்துவத்தை நிலைநிறுத்தல்.
- பன்னாட்டு சட்டங்களை மதித்தல் மற்றும் முரண்பாடுகளை தீர்த்தல்.
- பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- உறுப்பினர் நாடுகளுக்கு சமமான உரிமை வழங்குதல்.

அமைப்பின் முக்கிய பிரிவுகள் (Main Organs of the UN)

1. பொதுச் சபை (General Assembly) - 193 உறுப்பினர் நாடுகள் கலந்து கொள்கின்ற முக்கிய கலந்தாய்வு அமைப்பு.
2. பாதுகாப்புச் சபை (Security Council) - சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பேணும் அமைப்பு.
3. பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) - பொருளாதார, சமூக மற்றும் மனிதநேய வளர்ச்சியை ஒருங்கிணைக்கும் பிரிவு.
4. பொறுப்பாட்சி மன்றம் (Trusteeship Council) - காலனிகள் சுயாட்சியை அடைய உதவிய அமைப்பு (இப்போது செயலற்றது).
5. செயலகம் (Secretariat) - நிர்வாக பிரிவு; இதன் தலைவரே பொதுச் செயலாளர்.
6. அனைத்துலக நீதிமன்றம் (ICJ) - சர்வதேச சட்டங்களின் நீதிமன்றம் (நெதர்லாந்தில் அமைந்துள்ளது).

### பொதுச் செயலாளர்

தற்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்தேரஸ் (António Guterres) ஆவார். அவர் போர்த்துகல் நாட்டைச் சேர்ந்தவர். 2017 ஜனவரி 1 முதல் பதவியில் உள்ளார். அவரின் இரண்டாம் பதவிக்காலம் 2026 டிசெம்பர் 31 வரை நீடிக்கும். அவர் உலக நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை சமரசப்படுத்தும், மனிதாபிமான நடவடிக்கை களை ஒருங்கிணைக்கும் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்றும் முக்கிய பங்கு வகிக்கிறார்.



நாகராசா தனுஸ்காந்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

### அலுவல் மொழிகள்

ஐ.நா. ஆறு அலுவல் மொழிகளைக் கொண்டுள்ளது. அரபு, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, உருசியம், எசுப்பானியம்.

செயலகத்தில் பெரும்பாலும் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகள் பயன்படுகின்றன.

### நிலையான அபிவிருத்தி இலக்குகள்

இன்றைய உலகம் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், இன்னும் வறுமை, பசி, கல்வியின்மை, பாலின வேறுபாடு, வேலைவாய்ப்பு இல்லாமை, மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற பல பிரச்சினைகள் நிலவுகின்றன. இத்தகைய உலகளாவிய சிக்கல்களை ஒருங்கிணைந்த முறையில் தீர்த்து, அனைத்து மக்களுக்கும் சமத்துவம், நலன், மற்றும் பாதுகாப்பு கொண்ட உலகை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபை (United Nations - UN) 2015 ஆம் ஆண்டில் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals - SDGs) அறிவித்தது.

இந்த இலக்குகள் 2030 ஆம் ஆண்டுக்குள் அடையப்பட வேண்டியவை. அதனால் இவை "2030 நிலைத்த வளர்ச்சி திட்டம் (Agenda 2030)" என்றும் அழைக்கப்படுகின்றன.

### நிலைத்த வளர்ச்சி என்றால் என்ன?

"நிலைத்த வளர்ச்சி" என்பது தற்போதைய தலைமுறையின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, எதிர்கால தலைமுறைகளின் தேவைகளையும் பாதிக்காமல் வளர்ச்சியை நோக்கிச் செல்வதாகும். இது ஒரே நேரத்தில் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றையும் ஒருங்கிணைக்கும் கொள்கையாகும். இந்த கருத்தை முதன்முதலில் 1987 ஆம் ஆண்டு "Brundtland Report" எனும் ஐக்கிய நாடுகளின் அறிக்கை வெளிப்படுத்தியது.

நிலைத்த வளர்ச்சியின் மூன்று தளங்கள் (Three Pillars of Sustainable Development)

1. பொருளாதார வளர்ச்சி (Economic Growth) - வேலைவாய்ப்புகள், உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நிலை

தொடர்ச்சி▼

# ஐக்கிய நாடுகள் தினமும் நிலையான அபிவிருத்தி இலக்குகளும்

தொடர்ச்சி▲

மேம்படுதல்.

2. சமூக உடன்பாடு (Social Inclusion) - அனைவருக்கும் சம வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம், பாலின சமத்துவம் போன்றவற்றை உறுதி செய்தல்.

3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Environmental Protection) - நிலம், நீர், காற்று, விலங்குகள் போன்ற இயற்கை வளங்களை பாதுகாப்பதன் மூலம் எதிர்கால தலைமுறைக்கும் வாழ்வாதாரத்தை உறுதி செய்தல்.

நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDGs) - 2015 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உச்சிமாநாட்டில், 193 நாடுகள் இணைந்து 17 நிலைத்த வளர்ச்சி இலக்குகளை ஏற்றுக்கொண்டன.

அவை பின்வருமாறு,

இந்த இலக்குகள் உலகின் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும், வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பொது பொறுப்பாகும்.

நடைமுறை செயல்பாடுகள் (Implementation and Practice) - நிலைத்த வளர்ச்சி இலக்குகளை நடைமுறையில் செயல்படுத்த உலக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன:

1. அரசு கொள்கைகள்:

ஒவ்வொரு நாடும் தங்களது தேசிய வளர்ச்சி திட்டங்களில் SDG இலக்குகளை இணைத்துக்கொண்டு செயற்படுகின்றன. உதாரணமாக, இந்தியா "SDG India Index" உருவாக்கி மாநில அளவிலான முன்னேற்றத்தை கண்காணிக்கிறது.

2. அரசு - தனியார் கூட்டுறவு:

அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து சமூக நலன், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் திட்டங்களை செயல்படுத்துகின்றன.

3. சுற்றுச்சூழல் நடவடிக்கைகள்:

பசுமை ஆற்றல் (Green Energy), பிளாஸ்டிக் தடை, மரநடுதல், நீர் மேலாண்மை போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. கல்வி மற்றும் விழிப்புணர்வு:

SDG இலக்குகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரவச் செய்யும் கல்வி மற்றும் ஊடக முயற்சிகள் மிக முக்கியமானவை.

5. ஐ.நா.வின் பங்கு:

UNDP, UNICEF, WHO, UNESCO போன்ற அமைப்புகள் வறுமை ஒழிப்பு, கல்வி மேம்பாடு, பெண்கள் உரிமை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் பங்காற்றுகின்றன.

இலங்கை நடைமுறை செயல்பாடுகள்

• வறுமையை ஒழித்தல் "Samurdhi Development Programme" மூலம் வறுமைக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

• பசியற்ற உலகம் "National Nutrition Month" திட்டம் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை குறைக்கும் முயற்சிகள்.

• நல்ல உடல்நலம் இலங்கையின் இலவச மருத்துவ சேவை (Free Healthcare System) உலகில் சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது.

• தரமான கல்வி இலவச கல்வி திட்டத்தின் மூலம் பள்ளி சேர்க்கை விகிதம் 99%க்கு மேல்.

• பாலின சமத்துவம் பெண்கள் அரசியலில் பங்கேற்பு அதிகரிக்கும் வகையில் உள்ளூர் சபைகளில் 25% ஒதுக்கீடு.

• தூய்மையான நீர் "National Water Supply & Drainage Board" மூலம் 90%க்கும் மேல் மக்களுக்கு குடிநீர் வசதி.

• சுத்தமான ஆற்றல் சூரிய ஆற்றல் திட்டங்கள் - Soorya Bala Sangramaya மூலம் பசுமை ஆற்றல் வளர்ச்சி.

• வேலை வாய்ப்பு "Enterprise Sri Lanka" மூலம் இளைஞர்களுக்கான தொழில் தொடக்க கடனுதவி.

• புதுமை மற்றும் தொழில்"Tech City Colombo" மற்றும் "IT Start-up Incubators" மூலம் புதுமை ஊக்குவிப்பு.

• சமத்துவமின்மையை குறைத்தல் சமூக நலத்திட்டங்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி திட்டங்கள்.

• நிலைத்த நகரங்கள் கொழும்பு "Megapolis Development Plan" - நகர போக்குவரத்து மேம்பாடு.

• பொறுப்பான உற்பத்தி பசுமை உற்பத்தி மற்றும் கழிவு மேலாண்மை திட்டங்கள்.

• காலநிலை மாற்றம் "Climate Smart Agriculture Project" மூலம் விவசாயிகளுக்கு பசுமை தொழில்நுட்பம்.

• கடல் வாழ்வை பாதுகாத்தல் கடல் மாசுபாட்டைத் தடுக்க "Marine Pollution Control Unit" நடவடிக்கைகள்.

• நில வாழ்வை பாதுகாத்தல் "Reforestation Project" மூலம் காடுகள் மீளுருவாக்கம்.

• அமைதி மற்றும் நீதி 2009க்குப் பிறகு தேசிய நல்லிணக்கத்திற்கான திட்டங்கள் - Office for National Unity and Reconciliation.

• கூட்டுறவு ஜப்பான், இந்தியா, UNDP போன்ற அமைப்புகளுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்கள்.

சவால்கள் (Challenges)

நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன:

1. பொருளாதார சமநிலை இல்லாமை: பல நாடுகளில் பொருளாதார சமநிலை இல்லாமை வித்தியாசம் அதிகரித்து வருகிறது. இது வறுமை ஒழிப்பை கடினமாக்குகிறது.

2. காலநிலை மாற்றம்: காலநிலை மாற்றத்தால் உலக வெப்பநிலை அதிகரித்து, இயற்கை பேரழிவுகள் அதிகரித்துள்ளன.

3. அரசியல் நிலைகுலைவு: போராட்டங்கள், தீவிரவாதம் மற்றும் அரசியல் குழப்பங்கள் அமைதி இலக்கை பாதிக்கின்றன.

4. நிதி பற்றாக்குறை: பல நாடுகளுக்கு போதுமான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு இல்லாததால் வளர்ச்சி தடைப்படுகிறது.

5. COVID-19 தொற்றின் தாக்கம்: கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட பின்னடைவு உலகளாவிய வளர்ச்சியை பாதித்தது.

6. மக்கள் அதிகரிப்பு: மக்கள்தொகை அதிகரிப்பால் இயற்கை வளங்கள் குறைந்து, சுற்றுச்சூழல் சமநிலை குலைகிறது.

## தீர்வுகள்

(Solutions)

• பசுமை தொழில்நுட்பம்: புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சுத்தமான உற்பத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை ஊக்குவித்தல்.

• உலகளாவிய கூட்டுறவு: நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தல்.

• பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு: சமூக மாற்றத்திற்கான முக்கிய சக்தி.

• கல்வி விழிப்புணர்வு: SDG இலக்குகள் குறித்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்.

• நிதி ஆதரவு: வளமான நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கல்.

2030 இற்கான செயற்பாட்டு தசாப்தம் (Decade of Action)

2019 ஆம் ஆண்டு SDG உச்சிமாநாட்டில், ஐக்கிய நாடுகள் அமைப்பு 2020-2030 காலத்தை "நிலைத்த வளர்ச்சிக்கான செயற்பாட்டு தசாப்தம்" என அறிவித்தது. இதன் முக்கிய நோக்கம்: "No One Left Behind - யாரும் பின்தங்கக்கூடாது."

நிலைத்த வளர்ச்சி இலக்குகள் மனிதகுலத்துக்கான ஒருங்கிணைந்த உலகளாவிய உறுதிமொழி ஆகும். இவை வறுமையை ஒழிப்பதிலிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரை மனித வாழ்வின் அனைத்து துறைகளையும் தொடுகிறது. இலக்குகளை அடைவதற்கு அரசுகள் மட்டுமல்ல, மக்கள், சமூகங்கள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள், மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பும் அவசியம். 2030க்குள் 17 இலக்குகளும் நிறைவேற்றப்பட்டால், உலகம் முழுவதும் அமைதி, சமத்துவம், மற்றும் வளம் நிரம்பிய நிலைத்த உலகம் உருவாகும்.



# முதியோரைக் கைவிடும் போக்குகள் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றன

## வடக்கு ஆளுநர் கவலை தெரிவிப்பு

இன்றைய இளம் சமுதாயம் முதியோரை தங்கள் தேவைக்குப் பயன்படுத்திய பின்னர் அவர்களை முதியோர் இல்லங்களில் கொண்டு சென்று விடும் போக்குத்தான் இப்போது இங்கு அதிகரித்து வருகின்றது. அதனால்தான் முதியோர் இல்லங்கள் உருவாகிக் கொண்டு செல்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி சிவநகர் கிராம மூத்தோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முதியோர்கள்தான் எங்களின் வழிகாட்டிகள். நல்லது, கெட்டதைச் சொல்லி எங்களை வழிப்படுத்தியவர்கள் முதியோர்கள்தான். அவர்களுடைய அனுபவங்கள்தான் முக்கியமானது. இன்றைய இளைய தலைமுறை முதியோர்களை பராமரிக்கத் தவறுவதுடன், முதியோரின் அறிவுரைகளைக் கேட்பதற்குக் கூடத் தயாராக இல்லை.

வன்னிப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களை உருவாக்கியவர்கள் இங்குள்ள முதியோர்கள்தான். அவர்கள் தங்கள் மனிதவலுவைப் பிரயோகித்து அவற்றை உருவாக்கியிருக்கின்றார்கள். ஆனால் அவற்றை இப்போது எல்லோரும் மறந்து போகின்றார்கள். இன்றைய தினம் முதியோர்களை கௌரவிப்பதற்கு எடுத்த முயற்சியைப் பாராட்டுகின்றேன்.-என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும், முதியோர்கள், முன்பள்ளிக் குழந்தைகள் கலந்து கொண்டனர்.













# ஆந்திராவில் பயங்கர விபத்து; தீப்பிடித்து எரிந்த சொகுசு பஸ்

## 25 பேர் உயிரிழப்பு

ஆந்திர மாநிலம், கர்னூல் அருகே ஹைதராபாத்தில் இருந்து பெங்களூர் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் சொகுசு பஸ் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில், தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது. இந்த கோர விபத்தில் பஸ்ஸில் பயணித்த 25 பேர் உயிரிழந்தனர் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்தில் பலர் காயமடைந்தனர்.

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் இருந்து நேற்றிரவு 10.30 மணிக்கு வி காவேரி எனும் தனியார் சொகுசு பஸ் 41 பயணிகளை ஏற்றிக் கொண்டு ஆந்திர மாநிலம், கர்னூல் வழியாக பெங்களூர் நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது, கர்னூல் மாவட்டம், 44 ஆவது தேசிய நெடுஞ்சாலையில் சின்ன டேக்கூரு எனும் இடத்தில், இன்று அதிகாலை 3 மணியளவில் முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது சொகுசு பஸ் வேகமாக மோதியது.

இதில்,மோட்டார்சைக்கிளில்பயணித்தவர் தூக்கி எறியப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். ஆனால், பஸ்ஸின் அடியில் அந்த மோட்டார் சைக்கிள் சிக்கி கொண்டது. பஸ்ஸின் சாரதி இதனை கவனிக்காமல் பஸ்ஸை சுமார் 350 மீற்றர் வரை செலுத்தியுள்ளார். இதில் மோட்டார் சைக்கிளில் பெட்ரோல் ராங்க் வெடித்துள்ளது. அதிலிருந்து பேருந்தின் டீசல் 'ராங்கில் தீப்பற்றி', வேகமாக பஸ் முழுவதும் தீ பரவியுள்ளது.

அதிகாலை தூங்கி கொண்டிருந்த பயணிகளில் கீழ் வரிசையில் உள்ள படுக்கையில் தூங்கி கொண்டிருந்தவர்கள் மட்டுமே பஸ்ஸில் இருந்து இறங்கி உயிர் பிழைத்துள்ளனர். சிலர் அவசர காலத்தில் உதவும் 'எமர்ஜென்சி எக்சிட்' கதவை உடைத்து கொண்டு வெளியேறினர். இவர்களில் பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆனால் மேல் படுக்கையில் படுத்து தூங்கி கொண்டிருந்தவர்கள் எழுந்து கீழே இறங்குவதற்குள் பஸ் முழுவதும் தீ பரவியது. தீ மற்றும் புகையினால் அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதில் பஸ்ஸில் இருந்த சுமார் 25 பேர் பரிதாபமாக தீயில் கருகி உயிரிழந்தனர்.

கர்னூலில் விபத்தில் சிக்கி பஸ் தீயில் எரிந்த நிலையில், .

தகவல் அறிந்ததும் கர்னூல் போலீஸார், தீயணைப்பு படையினர், நோயாளர் காவுவண்டியில் வந்தது. அவர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயமடைந்து வீதியில் அமர்ந்து அழுது கொண்டிருந்தவர்களை கர்னூல் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருக்கையில் இருந்தபடியே பலர் உயிருடன் எரிந்து இறந்துள்ளனர். ஆதலால் எலும்பு கூடுகளாக இருக்கும் இவர்கள் யார் யார் என்பது குறித்து டி.என்.ஏ. பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இறந்தவர்கள் சிலரின் உடல்களுக்கு பிரேத பரிசோதனை நடத்தி அவரவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

இந்த பஸ் தீ விபத்து குறித்து அறிந்த குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நிதியில் இருந்து இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 2 லட்சம் இந்திய ரூபாவும், காயமடைந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் நிதி உதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்னூல் பொலிஸார் வழக்கு பதிவு செய்து தலைமறைவான பஸ் சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# சேந்தமங்கலம் எம்.எல்.ஏ. பொன்னுசாமி காலமானார்

தமிழகம் சேந்தமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. கு.பொன்னுசாமி (வயது 74) உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. கு.பொன்னுசாமி, உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலை நாமக்கல் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாரடைப்பால் அவர் உயிரிழந்தார் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



அவரது உடல் சேந்தமங்கலம் நடுக்கோம்பை ஊராட்சி புளியங்காடு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முத்துசாமி, சிவசங்கர், மதிவேந்தன், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் அவரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இன்று கொல்லிமலையில் உள்ள அவரது சொந்த கிராமத்தில் பொன்னுசாமியின் உடல் அடக்கம் செய்யப்பட உள்ளது.

# சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தலைமைத்துவத்துக்கு கொம்யூனிஸ்ட் கட்சியின் உயர்நிலை குழு ஆதரவு



சீனாவில் ஒரு கட்சி நிர்வாக நடைமுறை உள்ளது. எதிர்க்கட்சிகள் கிடையாது. இதன்படி சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் ஜி ஜின்பிங் கடந்த 2013 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவியேற்றார். கடந்த 2023 ஆம் ஆண்டில் அவர் 3 ஆவது முறை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டு பதவியில் நீடிக்கிறார்.

அவரது தலைமைக்கு எதிராக சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த நிர்வாகிகள், மூத்த இராணுவ தளபதிகள் போர்க்கொடி உயர்த்தி வருகின்றனர் என தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதன் காரணமாக ஏராளமான தலைவர்கள் மாயமாகியுள்ளனர் என கூறப்படுகிறது. குறிப்பாக சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் 3 ஆவது மிகப்பெரிய தலைவரான ஹீ வெய்டோங்கை கடந்த மார்ச் மாதம் முதல் காணவில்லை.

சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கொமிட்டி, அந்த நாட்டின் உயர் நிலைக் குழுவாக கருதப்படுகிறது. இந்த கொமிட்டி ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் பெய்ஜிங்கில் கூடி ஆலோசிப்பது வழக்கம். இதன்படி கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி ஜி ஜின்பிங் தலைமையில் மத்திய கொமிட்டியின் கூட்டம் பீஜிங்கில் தொடங்கியது. இதில் 350 உறுப்பினர்கள் பங்கேற்றனர். 3 நாள்கள் நடைபெற்ற கூட்டம் நேற்று நிறைவுப் பெற்றது.

இதன் பிறகு மத்திய கொமிட்டி வெளியிட்ட அறிக்கையில்,

சீன கொம்யூனிஸ்ட் கட்சி, ஆட்சி நிர்வாகம் மற்றும் இராணுவத்தில் முக்கிய பதவிகளில் இருந்த 9 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக ஹீ வெய்டோங்கின் பதவி நீக்கத்துக்கு மத்திய கொமிட்டி கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவருக்கு பதிலாக இராணுவத்தின் ஊழல் தடுப்பு துறை தலைவராக ஜாங் ஷெங்மின் நியமிக்கப்பட்டு உள்ளார். அவர் மத்திய இராணுவ கமிஷனின் துணைத் தலைவராகவும் பதவிவகிப்பார்.

மத்திய கோமிட்டி கூட்டத்தில் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் தலைமைக்கு ஆதரவாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த 5 ஆண்டுக்கான திட்டத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்மூலம் சுயசார்பு சீனா திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் கார் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் மரணம்

## இந்திய சாரதி கைது





அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்திய சாரதி ஒருவர் போதையில் லொறியை செலுத்தி, கார் மீது மோதியுள்ளார். இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

இந்தியாவைச் சேர்ந்தவர் ஜஷன் ப்ரீத் சிங் (வயது 21). இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தெற்கு எல்லை வழியாக சட்டவிரோதமாக ஊடுருவினார். இவரை கலிபோர்னியா எல்லையில் ரோந்து பொலிஸார் கைது செய்தனர்.

அப்போதைய ஜனாதிபதி பைடன் நிர்வாகம் சட்ட விரோத குடியேறிகளை விடுவித்து, அவர்கள் மீதான வழக்குகளை நிலுவையில் வைத்தது. இதனால் ஜஷன் ப்ரீத் சிங் அமெரிக்காவில் லொறி சாரதி ஆனார்.

இந்த நிலையில், இவர் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சான் பெர்னார்டினோ நெடுஞ்சாலையில் சரக்கு லொறியை செலுத்திச் சென்றார். அப்போது கார் மீது ஜஷன் ப்ரீத் சிங் செலுத்திச் சென்ற லொறி மோதியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர்.

பொலிஸார் ஜஷன் ப்ரீத் சிங்கை கைது செய்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப்போது அவர் போதைப் பொருள் பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டது.

மேலும் அவர் விபத்து நடந்த போது பிரேக் போடவில்லை என்பதும் அவரது லொறியில் பொருத்தப்பட்டிருந்த கமராவில் பதிவான காணொலி மூலம் உறுதி செய்யப்பட்டது. ஜஷன் ப்ரீத் சிங்கிடம் சட்டப்பூர்வ குடியுரிமை இல்லாததால், அவர் மீது குடியுரிமை மற்றும் சுங்க அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.



# காசாவில் பசி நெருக்கடி பேரழிவை ஏற்படுத்தும்

## ஐ.நா. சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு இரண்டு வாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், காசாவில் பசி நெருக்கடியானது பேரழிவை ஏற்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், மனிதாபிமான விநியோகங்களைத் தடுப்பதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என, சர்வதேச உதவிக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முற்றுகையிடப்பட்ட பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்படும் பொருட்கள் அங்கு வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனவும் உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், பாலஸ்தீனப் பகுதிக்குள் செல்வதற்கு இரண்டு வழிகள் மாத்திரமே திறக்கப்படுவதால், உதவிக் குழுக்களின் நாளாந்த இலக்கை அடைய முடியாத நிலை காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

இதன் அடிப்படையில், நிலைமை பேரழிவைத் தரக்கூடியதாகவே உள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசாவில் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட மொத்த சனத்தொகையில் கால்வாசியினர் பட்டினியால் வாடுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஊட்டச்சத்து குறைபாடு தாய்மார்களை மட்டுமன்றி, புதிதாகப் பிறந்த குழந்தையின் மீது தலைமுறை தலைமுறையாக விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கனடா முரசு

பக்கங்கள் - 03

வெள்ளிக்கிழமை 24/10/2025

## கனடாவில் தாதியர்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது



C2



# கனடாவுடன் அனைத்து வர்த்தக பேச்சுகளையும் உடன் அமுலாகும் வகையில் நிறுத்தினார் ட்ரம்ப்

கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சு வார்த்தைகளையும் உடன் அமுலாகும் வகையில் நிறுத்திக் கொள்வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் ரீகன் வரிகள் தொடர்பில் எதிர்மறையாகப் பேசினார் என வெளியான விளம்பரத்தை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி இந்த அறிவித்தலை விடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அறிவிப்பு தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப் தனது உத்தியோகபூர்வ சமூக வலைதள பக்கத்திலும் பதிவிட்டுள்ளார்.

மோசமான நடத்தையின் அடிப்படையில் கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சு வார்த்தைகளும் நிறுத்தப்படுவதாக அந்த சமூக ஊடகப் பதிவில் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவுடன் மூலோபாயக் கூட்டணியை பேணுவதற்கு விரும்பும் கனடா அரசு

சீனாவுடன் மூலோபாய கூட்டணியை பேண விரும்புவதாக கனடா தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சீனாவை உலகளாவிய குழப்பம் ஏற்படுத்தும் சக்தி எனக் குற்றம் சுமத்திய நிலையில், தற்போது அதே நாட்டை ஒரு மூலோபாய ரீதியான பங்காளினக் காணத் தொடங்கியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே சில பிரச்சினைகள் இருந்தாலும், அவை முழு உறவை பாதிக்கக்கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரமும் பாதுகாப்பும் ஆகிய துறைகளில் கனடா தனது நலன்களை முன்னேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் சீனாவுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என தெரிவித்துள்ளார்.



அனிதா ஆனந்த் சீனா, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்ததையடுத்து இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

விரைவில் பிரதமர் மார்க் கார்னி ஆசியப் பயணத்தை மேற்கொள்கிறார் அவர் மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.



# கனடா வெளியிட்ட காணொலி; டொனால்ட் ட்ரம்ப் கண்டனம்

அமெரிக்க ஜனாதிபதி கனடா மீது விதித்துள்ள வரிகளால் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் போக்கு அதிகரித்துவருகிறது.

இந்நிலையில், வரிவிதிப்பு தொடர்பில் கனடா வெளியிட்ட காணொலி ஒன்று ட்ரம்பை ஆத்திரமடையவைத்துள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாண அரசு சமீபத்தில் பிரச்சார காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த காணொலியில் , அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ரொனால்ட் ரீகன், வரிவிதிப்பு தொடர்பில் ஆற்றிய உரை ஒன்று இடம்பெற்றுள்ளது.

அந்த உரையில், 'வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரி விதிப்போம் என ஒருவர் கூறுவாரானால், பார்ப்பதற்கு அது நாம் அமெரிக்காவின் தயாரிப்புகளையும் வேலைகளையும் பாதுகாப்பதற்காக எடுக்கும் நடவடிக்கை போல் தோன்றும்.

ஆனால், காலப்போக்கில் அது ஒவ்வொரு அமெரிக்க பணியாளரையும் நுகர்வோரையும் பாதிக்கும். அதிக வரிகள் விதித்தல், மற்ற நாடுகள் பழிவாங்கும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யும். அதனால், வர்த்தகப்போர்கள் உருவாகலாம்' என்று கூறியுள்ளார் ரீகன்.

ஆனால், அந்த காணொலி ட்ரம்பை ஆத்திரமடையச் செய்துள்ளது. அந்த காணொலி குறித்து ரீகன் அறக்கட்டளை அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், அதில் கனடா போலியான ஒரு காணொலியை மோசடியாக பயன்படுத்தியுள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடகப் பக்கத்தில் இந்த விடயம் குறித்து செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள ட்ரம்ப், அது அமெரிக்க நீதிமன்றங்களின் முடிவுகளில் தலையிடுவதற்காக கனடா வெளியிட்டுள்ள விளம்பரம் என்றும், வரிகள் தேசிய பாதுகாப்புக்கும் பொருளாதாரத்துக்கும் மிக முக்கியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவில் தாதியர்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது



கனடாவில் தாதியர் தொழிற்துறையில் கடுமையான தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளதாகவும் தொழிற்துறைக்கான வெற்றிடங்கள் மூன்று மடங்காக அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் தாதியர் தொழிற்துறையில் பெரிய அளவில் வேலையை கைவிடும் நிலை உருவாகியுள்ளது.

மொண்ட்ரியால் பொருளாதார நிறுவனம் வெளியிட்ட புதிய அறிக்கையின்படி, தாதியர் வேலைவாய்ப்புகள் 2018 இல் 13,178 இலிருந்து 2023 இல் 41,716 ஆக மும்மடங்காக உயர்ந்துள்ளன.

இதுதொடர்பில் வெளியான அறிக்கையில்,

35 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு 100 புதிய தாதியர்களும் பதிவு செய்யும் போது, அவர்களில் 40 தாதியர் தொழிலைவிட்டு விலகுகின்றனர்.

இளம் தாதியர்கள் ஏன் தொழிலை விட்டு செல்கிறார்கள் என்பதை நான் நன்கு புரிந்துகொள்கிறேன். இது மிகுந்த மனஅழுத்தத்தையும், உடல் சோர்வையும் ஏற்படுத்துகிறது. நாங்கள் பணியமர்த்தல் குறித்து பேசுகிறோம், ஆனால் தொழிலில் நீடித்து இருப்பதைப் பற்றி (retention) கவனம் செலுத்துவதில்லை என சாஸ்காட்சுவான் மாநில தாதியர் ஒன்றியத் தலைவர் மற்றும் பதிவு செய்யப்பட்ட தாதி ப்ரைஸ் போயிண்டன் தெரிவித்துள்ளார்.

# வாகன விற்பனை கனடாவில் அதிகரிப்பு

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கனடாவின் சில்லறை விற்பனையில் குறிப்பிடத்தக்க உயர்வு பதிவாகியுள்ளது.

மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகனப் பாகங்கள் துறையே இந்த உயர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளதாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்றாவது தொடர்ச்சியான மாதமாக, வாகனங்கள் மற்றும் பாகங்கள் விற்பனையில் 1.8 வீத உயர்வு பதிவாகியுள்ளது.

புதிய கார்கள் விற்பனை நிலையங்களில் 2.3 வீதம் வளர்ச்சி காணப்பட்டுள்ளதுடன், பயன்படுத்தப்பட்ட கார்கள் விற்பனை நிலையங்களில் 1.5 வீதம் உயர்வு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, எரிபொருள் நிலையங்கள் மற்றும் எரிபொருள் விற்பனையாளர்களின் விற்பனை 2 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது, இது தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக பதிவாகும் வீழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில், கனடாவின் சில்லறை விற்பனை ஓகஸ்ட் மாதத்தில் 1 வீதம் உயர்ந்து 70.4 பில்லியன் கனடிய டொலராக உயர்ந்துள்ளது. மொத்தம் ஐந்து மாகாணங்கள் விற்பனை உயர்வைப் பதிவு செய்துள்ளன. அவற்றில் ஒன்டாரியோ 1.2 வீத வளர்ச்சியுடன் முன்னணியில் உள்ளது.

இதில் வாகனங்கள் மற்றும் பாகங்கள் விற்பனை நிலையங்களே முக்கிய பங்காற்றின. டொரொன்டோ பகுதியில் மட்டும் 2.4 வீத வளர்ச்சி பதிவாகியுள்ளது.

கியூபெக் மாகாணத்தில் மூன்றாவது மாதமாக தொடர்ச்சியான உயர்வு 1.8 வீதமாகும், இதில் மாண்ட்ரியால் பகுதி 2.3 வீத உயர்வுடன் முன்னிலை வகித்தது என புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

